# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - கூசு] யாழ்ப்பாணம்:- நந்தன வூல ஆவணி மீ கக உ செவ்வாய்க்கிழமை (26 August 1952) [இல - நள]


# திருஞானசம்பந்தர் திருமுறை

## இறைவன் கழலேத்தும் இன்பம்

( வித்துவான் திரு. சி. துரைசாமி ஐயர் அவர்கள் எழுதியது )

**தோற்றுவாய்**

திருவளர் காழியில் "கற்பு மேம்படு சிறப்பின் கணவனுர் கருத்தமைந்த" பகவதியாரை வாழ்க்கைத் துணைவியாகக் கொண்ட சிவபாதவிருதயர் "அரவணிந்த செஞ்சடையார் அடியலால் அறியாது" மனை வாழ்க்கை வாழ்ந்தனர்.

அக்காலை சமணர் முதலானோர் பொய்மிகுத்து அரன்பூதி சாதன விளக்கம் போற்றப்படாதருகுதல் கண்டு இடருழந்தார். அதனால் பரசமயம் நீருக்கும் தவப்புதல்வன் வேண்டுமெனத் தவம்புரிந்தார். அதன்பயனாகச் சைவமுந் தமிழும் தழைத்தோங்க, திருநீற்றின் செந்நெறி செழித்தோங்க "திசையனைத்தின் பெருமை எலாம் தென்திசையே வென்றேற" செழுந்தமிழ் வழக்கே அயல்வழக்கின் துறைவெல்ல உலகெலாம் சிவம்பெருக்கத திருஞானசம்பந்தர் தோன்றினர்.

தோன்றிய மூன்றாண்டில் நீராடச்சென்றதந்தையாரோடு சென்ற பிள்ளையார், தந்தை நீரில் மூழ்குதல் கண்டு அம்மே அப்பா என்றழுதார். கண்ட கண்ணுதலோன், அருள் புரிவான விரும்பி மலைக்கொடியை பால்அடிசில் ஊட்டென்ன, அம்மையார் திருமுலைப்பால வள்ளத்திற் கலந்து சிவஞானத் தின்னமுதம் குழைத்து ஊட்டினர். அதனால் "சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்" முதலான மெய்ஞ் ஞானங்களை உணர்ந்தார் சம்பந்தர்.

**திருமுறை**

மெய்ஞ்ஞானங்களை உணர்ந்த சம்பந்தர் தந்தை வினாவிற்கு விடையாக "தோடுடைய செவியன்" என்று ஆரம்பித்துப் பதிகம் பாடினர். அதுமுதல் இறைவன் எழுந்தருளியுள்ள தலங்கள் தோறும் சென்று பல தேவாரப் பதிகங்களை அருளிச்செய்து அடியார்களை இறைவன் கழலேத்தும் இன்பத்துள் ஆழ்த்தி, நல்லவர் தீயவரென்னாது நச்சினர் செல்லல் கெடச் சிவமுத்தியை அடையச் செய்தனர். தலங்கள்தோறும் பாடிய திருப்பதிகங்களின் சிறப்பினைக் கருதி அவைகளை முதல் மூன்று திருமுறைகளாக வகுத்தனர் பின்வந்தவர்.

எல்லா உயிரும் விரும்பும் அழியாப் பேரின்பமாகிய வீட்டுநெறி செல்வதற்குரிய ஒழுங்கானெறியை உணர்த்தும் நூல் என்பதுதான் திருமுறை என்பதின் திரண்டபொருள்.

"புனலில் ஏடெதிர்
செல்லெனச் செல்லுமே
புத்தனார் தலைதத்
தெனத் தத்துமே
கனலில் ஏடிடப்
பச்சென் றிருக்குமே
கதவு மாமறைக்
காட்டில் அடைக்குமே
பனையில் ஆண்பனை
பெண்பனை ஆகுமே
பழைய என்புபொற்
பாவைய தாகுமே
சின அராவிடம்
தீரெனத் தீருமே
சிறந்த சம்பந்தர்
செந்தமிழ்ப் பாடலே."

"பயனாகு நல்லாண் பனைக்கு
விடத்திற்கு
மயிலாகு நோய்க்கு மருந்தா—
முயிராகுஞ்
சிந்துமெலும்பிற்குச்சிரபுரத்து
காவலன்சம்
பந்த னியம்புதிருப் பாட்டு".

என்று பிற்காலத்தாரால் சிறப்பிக்கப்பெற்ற இதனுள் சைவ சித்தாந்தத்தின் முடிந்த பொருளாகிய முப்பொருள் உண்மையைப், பாலில் படு நெய்போல் பரக்கக்காணலாம். அன்றியும் வடமொழி தென்மொழி வல்லுநரான அருணந்தி சிவஞான முனிவர் ஆரும் வேற்றுமை உரிமைப் பொரு

தொடர்ச்சி 3 ம் பக்கம்

## கலைஞானி ஆனந்த குமாரசுவாமி

### நினைவு நாள்

இலங்கைப் பேரறிஞர்களில் ஒருவராகிய காலஞ் சென்ற Dr. ஆனந்த குமாரசுவாமி அவர்களின் கலைஞானச் செல்வத்தைப் பாராட்டி இந்திய பத்திரிகாசிரியர் திரு. பிரான்சிஸ் மொறேயஸ் கலா விமர்சகரின் 70-வது பிறந்த தின ஞாபகார்த்தக் கூட்டத்தில் பம்பாயில் பின் வருமாறு கூறினர்.

Dr. குமாரசாமி கீழைத் தேயக் கலைகளையும், மேல் நாட்டுக் கலைகளையும் பரிபூரணமாக மாசறக் கற்ற அபூர்வமான ஒரு அறிஞர். கிழக்கு நாடுகளின் பண்டையப் பெருமைகளை மறைவிலிருந்து வெளிப்படுத்தி மேலைத்தேயம் கீழைத்தேயம் யாவுக்கும் அவற்றைப் பரப்பிய பெருமை அவரையே சாரும்.

## திருக்கோணேசர் ஆலயம்

Dr. W. பாலேந்திர அவர்கள் லண்டனில் நடந்த உலக தந்த வைத்தியர் மகாநாட்டுக்குச் சென்ற பொழுது போர்த்துக்கல்லுக்குச் சென்று அங்கே திருக்கோணேசர் ஆலய அமைப்பைக் குறிக்கும் மூன்று படங்களைப் பெற்றார். பழைய அமைப்பையே திருப்பியமைத்தற்கு அவை பேருதவியாகுமெனக் கருதப்படுகின்றது.

## மூன்றும் உலக யுத்தம்

இந்த ஆண்டு முடிவில் மூன்றும் உலகயுத்தம் உண்டாகுமென்று பண்டிதரும்சுவரூப்சாமா என்னும் பிரபல இந்திய சோதிடர் கூறுகின்றார்.

## ஐந்தாம் தமிழ்விழா

தமிழ்வளர்ச்சிக்கழகத்தார் நடத்திவரும் தமிழ் விழாக்களில் ஐந்தாவது விழா 22-8-52 ல் சென்னையில் ஆரம்பமாயது.

Dr. S. சுப்பராயன் அவர்கள் இரண்டாவது கலைக் காட்சியைத் திறந்துவைத்துப் பேசும்பொழுது, இலங்கை, இந்தோனேஷியா, சுமாத்திரா முதலிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு பரவியிருப்பதை எடுத்துக்காட்டுகளால் விளக்கினர். அவர் தொடர்ந்து பேசுகையில் பண்டைத் தமிழ்மக்கள் மதிவளப் பெருக்கம் வாழ்க்கைப்பண்பாட்டு விருத்தி முதலியவற்றையே நோக்கமாகக்கொண்டு இந் நாடுகளுக்குச் சென்றார்களன்றி அரசியல் நோக்கங்களல்லவென்று குறிப்பிட்டார்.

## தீதிலா நன்மைத் திருவருட் குன்றே!

திருச்சிற்றம்பலம்

சோதியாய்த் தோன்று முருவமே யருவாம் ஒருவனே சொல்லுதற்கரிய
ஆதியே நடுவே யந்தமே பந்தம் அறுக்குமா னந்தமா கடலே
தீதிலா நன்மைத் திருவருட்குன்றே திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக்கருளாய் வந்துநின் னிணையடி தந்தே.

திருச்சிற்றம்பலம்.

— கோயிற்றிருப்பதிகம், திருவாசகம்.

## சிவனடியாரைச் சிந்தைகொளல்

### மறைஞானசம்பந்த சிவாசாரியர்

23-8-52

மறைஞானசம்பந்த சிவாசாரியர் திருப்பெண்ணாகத்திலே திருவவதாரஞ் செய்தார். அவர் மறைஞானத்தையுங் கற்றுத் தெளிந்தமையால் மறைஞான சம்பந்தர் என்னும் காரணப்பெயரால் அழைக்கப் பெறுகின்றனர்.

இவர் அருணந்தி சிவாசாரியரிடம் அடிசேர் ஞானம்பெற்று, உமாபதிசிவாசாரியருக்கு ஞானோபதேசஞ்செய்து ஞானபூசை ஆயரறிச் சந்தானசாரியருள் ஒருவராய்த் திகழ்ந்து, அத்துவிதமுத்தி எய்தினர்.

"பார்திகழ வளர்சாம
வேத மல்கப்
பாராசரமா முனிமரபு
பயில ஞானச்
சார்புதா வந்தருளி
யெம்மை யாண்ட
சைவசிகாமணி மருதத்
தலைவ னந்தண்
கார்மருவு பொழில்புடைசூழ்
மதின்மீதே மதியங்
கடவாமை நெடுங்கொடியின்
காந்தகையுங் கடந்தைச்
சீர்நிலவு மறைஞான
சம்பந்த னேந்தை
திருவளரு மலரடிகள
சென்னி வைப்பாம்"

(உமாபதிசிவாசாரியர்)

### குலச்சிறை நாயனர்

28—8—52

பாண்டி நாட்டிலே மணமேற்குடியிலே வாழ்ந்து நெடுமாறன் என்னும் பாண்டிய ராசனுக்கு முதன் மந்திரியாயிருந்து விபூதி உருத்திராக்கம முதலிய சாதனங்களுடையராய், திருவைந்தெழுத்தோதும் சிவனடியார்களைக் குலம் குணம் முதலிய நோக்காது வழிபட்டு வந்தார். அடியார் ஒருவர் வரினும் பலர் வரினும் அவ்வாறே வழிபட்டுத் திருவமுதூட்டுவித்தார். சுந்தரமூர்த்தி நாயனாரால் புகழப்பெற்றவர்.

அவர் சிவபெருமானுடைய திருவடிகளைத் துதிப்பவராய்ப் பாண்டிமாதேவியாராகிய மங்கையர்க்கரசியார் செய்த திருத்தொண்டுக்குத் துணைசெய்தார். அங்ஙனம் துணைசெய்து சமண சமயம் நீக்கிப் பாண்டி நாடெங்கும் திருநீறு பொலிந்து சைவம் வளரும் பொருட்டுத் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனருடைய திருவடிகளைச் சிரமீது சேர்த்துச் சிறந்து விளங்கினர்.

"புன்ன யத்தரு
கந்தர்போய் நீக்கவும்
தென்னர் நாடு
திருநீறு போற்றவும்
மன்னு காழியர்
வள்ளலார் பொன்னடி
சென்னி சேர்த்தி
மகிழ்ந்த சிறப்பினர்."

அரசியல் அலை

# அரசாங்கத் தீர்மானங்களிலே தடுமாற்றம்!

## அரிசியின் விலை ஏற்றப்படுமா?

## ஆருக்கு இலாபம்? ஆருக்கு நட்டம்?

மூளைப் பலவீனன் அல்லது முதுகெலும்பில்லாதவன் ஒன்றைத் தீர்மானிக்க முடியாது தத்தளிப்பான். முடிவுக்கு வரமாட்டான். வந்தாலும் மாற்றிக் கொண்டிருப்பான்!

இந்த விதமாக இலங்கை அரசாங்கம் அரிசி விலையை ஏற்றிவிடத் தீர்மானித்திருப்பதாகவும் ஐப்பசி மாதந்தொடக்கம் ஒரு படி 45 சதம் ஆக விற்கப்படும் என்றும் ஒரு பத்திரிகை அறிவித்தது.

அடுத்த நாள் நிதிமந்திரி அரிசிவிலை ஏற்றம்பற்றிப் பத்திரிகைச் செய்திகள் தவறானவை என்றும் அவ்வாறு அரசாங்கம் இன்னமும் தீர்மானஞ் செய்யவில்லை என்றும் ஒருகூட்டத்திற் சொன்னாராம்.

இதற்கிடையில் இலாபம் கொள்ளை அடிக்க ஓடுமீன் ஓடி உறுமீன் வரும்வரையும் வாடி யிருக்கும் வியாபாரக் கொக்குகள் குதூகலித்து விட்டார்கள்.

ஒருவித காரணமுமின்றி நெல் அரிசி விலை ஆகாயமளாவ ஏறிக்கொண்டே வருகிறது. பொதுசனம் செய்வதறியாது தயங்குகின்றனர்.

அரசாங்கம் இவ்விதமாகக் காலத்துக்குக் காலம் வியாபாரிகளுக்குப் பெருந்துணை புரிவது தர்மமல்ல. இவ்விதமாக விலை ஏற்றம் செய்வது வியாபாரிகளின் நன்மைக்கேயாமென்பது வெளிப்படையாகின்றது.

இந்த விதமான செய்திகளைப் பரப்புவதிற் பத்திரிகைகள் பிரத்தியேகமான கவனம் செலுத்தவேண்டும். அரசாங்கமும் இதை வரையறுக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்கவையகமும் துயர்தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ். நந்தனஹு ஆவணிமூ கக உ செவ்வாய்க்கிழமை

## ஏழைகள் என் செய்வார்கள்?

அரசாங்கச் செலவுக்கு வருவாய் போதாதாம். விரயஞ் செய்வது விரும்பியபடி இருக்க வேண்டுமாம். வருவாயை எவ்வாற்றானும் பெருக்க வேண்டுமாம். இப்படியான நிலைமையில் அரசாங்கம் ஆலோசனையில் ஆழ்ந்து கிடக்கின்றதாம். அவ்வித ஆராய்ச்சியில் ஊருக்கு எளியவன் பிள்ளையார் கோவிலில் ஆண்டி என்ற விதமாக ஏழை தான் யோசனையின்பாற் பட்டானாம். இவ்வளவு தான், அவன் குடிக்கும் கூழுக்கும் ஆபத்து நேரிட்டது.

அளவு அரிசியால் அரசாங்கம் அளவுகடந்து நட்டம்படுகிறது உண்மையே. அப்படியானால் எந்தத் திட்டத்தில் நட்டம் அடையாதிருக்கிறது என்று கேட்கின்றோம். ஆகவே நட்டமடைந்தும் குடியானவர்களுக்குக் குடிப்பதற்குக் கூழோ கஞ்சியோ கொடுப்பது அரசாங்கக் கடமை என்பதை அறிந்துதான் இதுவரையும் அளவு அரிசியைக் குறைந்த விலைக்கு அரசாங்கப் பகுதியார் கொடுத்து வருகின்றார்கள் என்று சந்தோஷம் அடைந்திருந்தோம். இப்போது நட்டம் அடையக்கூடாதென்று கடமையைக் கைவிட அரசாங்கம் எண்ணுகின்றதென்பதை அறிந்து கவலை கொள்கின்றோம் அரசாங்க ஆலோசனையைக் கண்டிக்கின்றோம்.

மனிதன் உணவுக்கும் உடைக்கும் இன்றியமையாதனவற்றை நீக்கி மற்றைய பொருட்களிலே வரி விதித்து வேறுவகையிலோ வருவாயை அரசாங்கம் தேடுமேயானால் ஆர் குறை கூறுவார்கள். இரத்தத்தைப் பிழிந்து அல்லும் பகலும அரும்பாடுபட்டு வெயிலில் வெதும்பி மழையினால் நடுங்கி வேலை செய்யும் ஏழைகள் உண்ணும் அரிசி விலையை ஏற்றி விடப் பொது நலம் விரும்பும் மக்கள் ஆட்சி மகத்துவம்பெற்றிருக்கும் அரசாங்கம் எண்ணுமா? எண்ணுவது முறையா?

தேவைக்குத்தக உற்பத்தியின்றேல் விலை ஏற்றம் உண்டாகும் என்பது பொருளாதார உண்மை. அரிசி உணவு கொள்வோர் தொகை அதிகரித்து வர நெல் விளைவு அதற்குத் தக்கவாறு பெருகாது நிற்கின்றமையால் அகில உலகத்திலும் அரிசி விலை கூடுதலாகவே யிருக்கின்றது. பொதுசன நன்மை விரும்பும் சீவகாருண்ய சிந்தை படைத்த செங்கோலாட்சி நிலவும் நாட்டில் அரிசி விலையை ஏழைகள் இன்னலின்றிப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக அரசாங்கம் குறைத்து விட வேண்டியது முறை.

இது ஒருபுறம் இருக்க, அரசாங்கத்தின் அகத்தில் ஆலோசனை உதித்தஞான்றே ஞான வுணர்ச்சியால் அந்த யோசனையை உணர்ந்து வியாபாரிகள் குறைந்த விலைக்குப்பெற்ற அரிசியை பெருமிதமான இலாபத்துடன் விற்கின்ற நிலைமையை ஆராய்ந்து பார்த்தால் பணம்படைத்தவர்களுக்கே பன்மடங்குபொன் பெருக வழிவகைகளை அரசாங்கம் காலத்துக்குக் காலம் தேடி வைக்கின்றது போலத் தோன்றுகின்றது. ஐப்பசிமாதம் தொடக்கம் அரிசி விலை ஏற்றப்படும் என் றறிகின்றதாக ஒரு பத்திரிகை செய்தியைப் பிரசுரித்த அதேகணத்தில் நகரத்திலும் நாட்டிலும் ஊரெங்கும் அரிசி விலை மின்சார அதிர்ச்சியின் பேறுபோல உடனே ஏற்றமாகி விட்டது.

சன்னெஞ்சம் படைத்த வஞ்சக வியாபாரிகள் இவ்விதம் ஒரு வதந்தியை வாய்ப்பான ஒரு சாட்டாக வைத்துக்கொண்டு பகற் கொள்ளை அடிப்பார்களேயானால் என் செய்வார்கள் ஏழைகள்? இவர்கள் மனித வர்க்கத்தைச் சேர்ந்தவர்களா? விலங்கினவிபரீதப் பிராணிகளா? மனச்சான்று மருந்துக்கும் இல்லாத பதர்களா? உழுது பண்படுத்தி நீர்ப்பாய்ச்சிப் பயிரிட்ட கமக்காரன் தான் விளைவித்த நெல்லின் விலையை ஏற்றிவிட்டாலும் ஒருவாறு பொறுத்துக்கொள்ளலாம். யாரோ வேலை செய்து வியர்வை சிந்த யாரோ இலாபம் எடுத்துக் கொள்வதா?

இந்த விதமான நிலைமையை அரசாங்கம் பார்த்துக்கொண்டு வாளாவிருப்பது தகாது. ஒரு காரணமுமின்றி அரிசி விலை கூட்டப்படவேண்டி வந்ததை விசாரித்து அவ்விதமாக விலையேற்றி வியாபாரஞ் செய்கின்றவர்களுக்குத் தக்க தண்டனை விதிக்க வேண்டியது முறை. இல்லையேல் ஏழைகள் சருகு புசித்து காற்றை உட்கொண்டு கடுந்தவமிருந்து ஒடுங்கி விட வேண்டி வரும். ஏழைகள் தோழர்கள் என்று கூக்குரல் செய்யும் அரசியல்வாதிகள் அரசாங்கத்தைக் குறை கூறுவதிலும் பார்க்க நியாயத்தையும் நீதியையும் வீசிவிட்டு வஞ்சநெஞ்சர்களாகி ஏழைகளின் இரத்தத்தைஉறிஞ்சிக்கொண்டிருக்கும் வியாபாரிகளுக்கு வேண்டிய புத்திமதி சொல்லக்கூடாதா?

卐

## தீக்குளித்தல் பொழுது போக்கா?

நன்னினைவும் நன்மொழியும் நற்செயலும் அருகிவாவும் தீய எண்ணமும் தீய சொல்லும் தீய செய்கையும் பரவிவரவும் கலிகாலம் தலைவிரித்தாடுகின்றதே. சமய வாதங்கள் நடந்த காலத்திலும இவ்விதமாக இறை நம்பிக்கை இல்லாது போகவில்லை. தத்தம் மதங்களை பரிசுத்தமானவை என்று முழக்கஞ் செய்தார்களே யன்றிக் கடவுள் உண்டு என்ற திட நம்பிக்கை காட்டி வந்தார்கள்.

கதிர்காமப் புனித புண்ணிய தீர்த்தம் ஆடப்போகும் யாத்திரிகர்களோடு பொழுது போக்குக் கருத்துடன் இறை நம்பிக்கையின்மைக் கொள்கையைப்பரப்புவோரும்கலந்து சென்றுவரும்வழக்கம இப்பொழுது சில ஆண்டுகளாக உண்டு. மனம் மொழி மெய் மூன்றுஞ் சுத்தமாக முருகநாமம் உள்ளம் உருக உச்சரித்துக் கொண்டு பலகாதவழி அடர்ந்த காட்டினூடே அர அர என்று சரணமொழி சாற்றி கால்நடையாக நடந்து செல்லும் பக்தர்கள யாத்திரை செல்கிறார்கள் தாமும் யாத்திரை போகின்றார்கள் என்று உண்டு உடுத்துக் களியாடி விடுமுறைகால வேடிக்கை பார்ப்பார்களைப் போன்று இரத்தி லேறிக் கோயிலருகே குதித்து விளைந்து வாழ்வு நடத்திக் காட்சிகளைப் படம் பிடிப்பதிலும அவற்றைப்பற்றி விபரீத விமர்சனம் வரைவதிலும் காலங் கழிக்கின்றார்கள் என்றால் ஆலயங்களைத் தாமும் இக்காலத் தடுமாற்றத் துக்கப்பாற் பாதுகாத்து வைக்கப்படவியலாத நிலைமையில் இருக்கின்றனவே என்று பரிதபிக்கவேண்டி வருகின்றது.

கிறீஸ்தவமதப் போதகர்ஒருவர் என்றால் அவர் கடவுள் நம்பிக்கை உள்ளவராய் இருத்தல் வேண்டும் அன்றியும் கதிரைமலைக் கந்தன் தரிசனஞ் செய்யும் பக்தர்கள் இறைநம்பிக்கை உள்ளவர்கள் என்று அறிந்தவராதல் வேண்டும, கந்தன் அடியார்கள் விரதமிருந்து மனத்தில் வேண்டிக்கொண்டபடி தீக்குளிப்பதானல் அதுதிட நம்பிக்கை கொண்டு உடம்பை அர்ப்பணஞ் செய்கிறார்கள் என்ற எண்ணம் இந்தப் பாதிரியாரிடம்நிகழாததென்னையோ?

உருக்கொண்டு ஆடுகின்றவன் ஒருவனைப் பார்த்துக் கொண்டு நிற்பவர்கள் தாமும் அப்படியான எண்ணங்கொண்டால் அதை இறைவன் அருள் என்று எண்ணி அதே மயமாவார்கள். எள்ளி நகையாடார்கள். நெருப்புச் சுடுமா அன்றித் தண்ணென இருக்குமா என்று பரிசீலனை செய்யப் பாதிரியார் அவர்கள் வந்திருப்பதாக அவர்தம் பத்திரிகைக் கூற்றுப் பகிரங்கப்படுத்துகின்றதே.

எவ்வாறு தீயின் [illegible] நடக்கலாம் என்று விஞ்ஞான சாத்திர முடிவுகளையும் மருத்துவ நூல் ஆராய்ச்சியையும் மதிநுட்ப விளக்கங்களையும் ஒவ்வொன்றாகப் பன்னாட் கற்று வழி தேடியவர் போன்றிருக்கின்றது பாதிரியார் அவர்களின் விமர்சன விளக்கம். திருக்கோயிலிலே தெய்வ நம்பிக்கையுள்ளவர்கள் உடம்பை அர்ப்பணஞ்செய்யும் வேளையில் உலகாயத ஆராய்ச்சியில் உணர்ச்சிமிக்க இவர் சிவபூசையிற் கரடி சென்றாங்கு அடாத எண்ணங்கொண்டதும்; சுடாது என்ற நெருப்பு, பாதத்தைப் பாதித்ததும், பாதிரியாருக்கு இறை நம்பிக்கையை இனியேனுமாவது உண்டாக்கிவிடும் என்று எண்ணுகின்றோம்.

## பண்டைத் தமிழ்க் கலைத்திறன்

### தமிழ்க்கலை வளர்ச்சிக்கு ஆஸ்திக உணவு

ஐந்தாந் தமிழ் விழாவிலே இலங்கைத் தபால் தந்தி மந்திரி திரு. சு நடேசன் அவர்கள் ஓவிய சிற்ப பகுதிக்குத் தலைமை வகித்துப் பேசும்பொழுது தமிழ்க்கலை வளர்ச்சிக்கு ஆஸ்திக அறிவு இன்றியமையாததென்றும் தமிழ்க் கலைகளுள் ஒன்றாகிய சிற்பக்கலை பல்லவர் காலத்திற் சிறந்திருந்ததென்பதை இன்று காணக்கிடக்கும் சிற்பங்கள் எடுத்துக் காட்டுகின்றனவென்றும், பண்டைக் காலத்திலே தமிழ் மக்கள் கடல்கடந்து சென்று தம் கலைத்திறனைப் பிறநாடுகளிலுங் காட்டியிருக்கிறார்களென்றும தமிழ்நாட்டிலே கோயில்கள் அழகு அமைப்புச் சிறந்த கலைக் களஞ்சியங்களாயிருக்கின்றனவென்றும் தமிழ்க்கலை ஆராய்ச்சி இன்றியமையாததாய்ச் செய்யப்பெறவேண்டுமென்றுங் கூறினார்.

தொடர்ந்து பேசுகையில் மஹெஞ்சதாரோப்புதை பொருள் தரும் நாகரிகம் தமிழ் நாகரிகத்திற்கு அடிப்படையாய் இருக்கிறது பாவாவிலும் தமிழ்க்கலை பரவியிருக்கின்றது. இலங்கையிலு பல கட்டிடங்கள் பண்டைத் தமிழ்க்கலைத் திறனுக்குச் சான்றாய் அமைகின்றன. இந்திய நாகரிகத்தைத் தமிழ் மக்களே வெளிநாடுகளிற் பரப்பினார்களென்பது நன்கு காணக்கிடக்கின்றது என்று உற்சாக மூட்டும் உண்மைகளை எடுத்துக் காட்டியபின் தமிழ்க்கலை வளர்ச்சிக்குத் தமிழ் மக்களின் தெய்வ பக்தியே காரணம். நாஸ்திகம் கலையை ஒழித்துவிடும். ஆகையால் நாஸ்திகத்தை அணுக வொட்டாது தெய்வ பக்தியைத் தமிழ்மக்கள் வளர்க்கவேண்டுமென்று கூறினர்.

## தானே வளருந் தமிழ் மொழி

### பிறமொழித் துவேஷமில்லா வளர்ச்சி

தமிழ்நாட்டுத் திலகம் ஸ்ரீ இராசகோபாலாச்சாரியா ரவர்கள் ஐந்தாவது தமிழ் விழாவை 23-8-52-ல் திறந்து வைத்துப் பேசும்பொழுது தமிழ் மொழியானது தனக்கு இயல்பாயமைந்த சிறப்பால், தானாகவே வளர்ந்து வருகிறது. நாம் அதன் வளர்ச்சிக்கு ஒன்றும் செய்ததாயில்லை யென்றும் ஒரு பசுவைத் தீன்கொடுத்து வளர்ப்பதுபோல் இதன்வளர்ச்சிக்கும் நாம தொண்டாற்ற வேண்டுமென்றும் அத் தொண்டு பிறமொழித் துவேஷம முதலியன இல்லாத் தூய தொண்டாயிருக்கவேண்டுமென்றும் வற்புறுத்திக் கூறினார்.

தொடர்ந்துபேசுகையில் சில பத்திரிகைகளிற் பிழையான உரைகள் மலிந்து கிடக்கின்றனவென்றும அவற்றைப் பொதுமக்கள் பார்க்கக்கூடாதென்றும எச்சரிக்கை செய்தார்.

## வாழ்க்கை வானில்

வளர்மதி

### இது நல்ல உலகம்!

சீனி விலை ஏறிவிட்டதென்று சீறிச் சினந்து சிலர் ஆரவாரஞ் செய்தாலும் முன்னரே கேட்டும் கேள்வியில்லாது நாட்டரிசி விலை உயர்ந்துவிட்டது. கூழுக்குப்பில்லை என்ற குரல் ஒருபுறம், பாலுக்குக் கற்கண்டு தேடுவார் பாடு மற்றப்புறம். இது பொதுசனங்களைப் பொறுத்தளவில்.

இதற்கிடையில் கொள்ளை இலாபக் கூட்டாளி இருக்கின்றாரே. அவருக்குக் குரு சந்திர யோகம் திடீரென உதித்தது. நற்கிரகங்கள் அவரைப் பொறுத்தவரையில் அடிக்கடி நன்மை செய்வார்கள். தீக் கிரகங்களோ அவருக்கஞ்சித் தூரத்தே நிற்பார்கள்,

ஆவணி 22-ந் திகதிக்குமுன் உள்ள விலையிலே பெறருக்கொண்ட சீனிக்கும் கள்ளவிலைதான. பின்னர் பெற்ற சீனிக்கும உள்ள விலைதான்.

### விலை அரக்கன்!

சீனியோடு நின்றுவிடுவார்களா? இல்லை. ஆரோ ஒருவர் அரிசி விலை ஏறப்போகிறதென்று பத்திரிகையில் எழுதினார். அவ்வளவுதான். விலை அரக்கர் வீறுகொண்டெழுந்தனர். அரசாங்கக் கட்டுப்பாட்டளவுக்கமையாத அரிசி விலை மலேரியாக்காய்ச்சற்காரனின் வெப்பம்போல் விறுவிறு என்று ஏறிவிட்டது. மது அரக்கன் கொலை அரக்கன் என்ற பல நிற அரக்கர்களில விலை அரக்கன் என்றால் அரக்கரில் அரக்கன். இரக்கம் என்பது எள்ளளவும் கிடையாத இக்கொடிய மானிடப் பதர்களை அழித்துவிட அவதார புருடர்கள் தோன்றினாலன்றி முடியாது போலும்.

### நூற்றொருவர் மண்டபம்

இந்த இன்னல்களுக்கிடையே பாராளுமன்ற மாளிகை பெருப்பிக்கப்பட வேண்டிய நிலைமை ஏற்படப்போகின்றதாகப் புதினம் வெளிவந்திருக்கிறது. கட்டடம் காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டு வருகின்ற செலவு ஒருபக்கம். பிரதிநிதிகள் தொகை ஐம்பது நூறாகி நூறு அவ்வாறுருமோ என்ற நிலையில இருக்கிறது.

இந்த நூற்றொருவர்களால் ஏற்படும் பண விரயம போதாதென்று இனனமும் ஒரு பத்துப் பரோபகாரிகளுக்கு ஏழைகள உழைத்து உதவவேண்டிவரப்போகிறதே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிவனடியார் வழிபாடு

## அகங்கார இருளகற்றி அருளொளி பெருக்கும் சாதனம்

சைவத் திருநெறியின் பெருமைகள் பலவற்றுள் சிவனடியார் வழிபாட்டை வற்புறுத்துவது ஒன்றாகும். அடியார் வழிபாடும்கூட ஏற்றச் சாதனமாகச் சீவன் முத்தர் நிலையிலும், செய்யப்படுவதாக அமைத்தது உணரத் தக்கது. சமய வாழ்க்கையில் தருக்கு உள்ளம் இருத்தல் கூடாது. ஆணவ இருளைப் போக்கும் தக்க ஒளியாக, யான், எனது என்ற தீய உணர்ச்சிகளை ஓட்டும் உயர் சாதனமாக சந்தேகம் என்னும் சஞ்சலப் பேயை விரட்டும் உயர் மருந்தாகச் — சிவனடியார் வழிபாட்டைக் கண்டனர். சமய வாழ்க்கையின் வளர்ச்சிக்கு வேண்டற்பாலது சந்தேகமற்ற உள்ளம். சாதாரண உலகியலிலேகூடச் சந்தேக உணர்ச்சிகொண்டவனுக்கு ஆக்கம் இல்லை. தீய குணங்களுள் ஒன்றாகத்தானே சந்தேகம் வைத்தெண்ணப்படுகிறது! மகாகவி ஷேக்ஸ்பியர் — (Suspicicn always haunts the guiity mind) சந்தேகம் குற்றமுள்ள நெஞ்சிற் குடியிருக்கும் என்று கூறுகின்றார். பிறரைப் பற்றி அவர்களது அகத்தைப்பற்றி ஆராய்தலே எப்பொழுதும் ஆபத்தாக முடிதல் உலக இயற்கை. தன்னை விடப் பிறர் சிறியர் அல்லர் என்ற உணர்ச்சி உலகில் பெரும்பாலார்க்கு இருப்பது இயற்கை. இதனுலெல்லாம் விளைகின்ற தீமைகளை எண்ணித்தான் சைவப் பெருமக்கள், "தூய்மையின் சின்னமாகிய நீறு, கருணையின் காரணமாகிய கண்டிகை அடிமைத் திறம், நினைந்துருகும் பெற்றியைக் காட்டும் ஐந்தெழுத்தோதல் முதலியவற்றைக் கொண்டவர்களைக் கண்டால் சிவமாகவே கருதிவழிபடுக' என்று ஆணையிட்டார்கள். ஐயராத அன்பிற் சிறந்த — சித்தம் சிவமேயாய சிவஞானிகளோடு இணங்கி இருக்க என்று ஆணையிட்டார்கள். சிவவேடம் நமக்குச் செய்கின்ற உதவி அளப்பிலது. சிவவேடம் சிவபெருமானை நமக்கு நினைப்பித்து வாழ்த்தவகை செய்கிறது. உலகியலிலே இருக்கின்ற பொழுது சிவபெருமானை நினைப்பிக்கின்ற தொண்டு பெருந்தொண்டு. அதனாலன்றோ சேரமான் பெருமாள் நாயனார், "திருநீற்றின் வாரவேடம் நினைப்பித்தீர் வருந்தாதேகும்" என்று கூறினார். சிவவேடத்தைக் கருணை என்றே சேக்கிழார் பாராட்டுகின்றார். திருநாவுக்கரசர் பெருமான் கல்லையே தெப்பமாகக் கொண்டு, கருங்கடலைக் கடந்து கரையேறி, பாதிரிப் புலியூர் நகரினுள் வருகின்றார். இந்த இடத்தில் சேக்கிழாரடிகள் திருநாவுக்கரசரைத் திருவேடத்தரசராகக் காட்டுகின்றார்

"தூயவெண்ணீறு துதைந்தபொன்
மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு
சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி
கண்ணும் பதிகச்செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார்
புகுந்தனர் வீதியுள்ளே"

என்று திருநாவுக்கரசரின் தோற்றத்தைக் காட்டுகின்றார். இந்தத் திருவேடப் பொலிவுடன் நகரினுள் நுழைந்த அடிகளைக் கண்ட மக்கள் கைகுவித்து வணங்குகின்றார்கள். அடிகளது திருவேடம் அத்தனை பேருக்கும் சிவபெருமானை நினைப்பிக்கின்ற கருணையாலாய தொண்டைச் செய்தது. இத்தகு கருணையைக்கண்டால், அமணருக்கும் தீய எண்ணம் உண்டாகி இருக்காது என்று தம்முள் மக்கள் பேசிக்கொள்கின்றனர்.

"கண்டார்கள் கைதலை மேல்குவித்
திந்தக் கருணைகண்டால்
மிண்டாய செய்கை அமணர்கையர்
தீங்கு விளைக்கச்செற்றம்
உண்டாயினவண்ணம் எவ்வண்[ணம்]"

என்றுரைப் பார்கள்பின்னும்
தொண்டாண்டுகொண்டபிரானைத்
தொழுது துதித்தனரே"

என்பது சேக்கிழார் அடிகள் பாடல். சிவவேடத்தைக் கண்ட பொழுது சிவபெருமானை நினைந்து வாழ்த்த முடிகிறது என்பதனைச் சுந்தரர்,

"துணிப்படும் உடையும்
சுண்ணவெண் ணீறும்
தோற்றமும் சிந்தித்துக் காணில்
மணிப்படு கண்டனை
வாயினால்கூறி மனத்தினால்
தொண்டனேன் நினைவேன்"

என்று அருளி விளக்குகின்றார். சிவனடியார் வழிபாட்டினாலும் இணக்கத்தினாலும் வாசனாமலத் தாக்கலிலிருந்து வீடுபெற முடிகிறது மாதவச் சிவஞானமுனிவர் தமது மாபாடியத்தில சிவனடியார் வழிபாட்டைப்பற்றிக் கூறுவன சிந்தைக்குரியன. "செல்வப் பெருக்கம் உடையார்க்கு உணவாகிய ஆன்பால், உடம்பு நோயின்றி வளரச் செய்யும் மருந்தும் ஆமாறுபோல இவ்வழிபாடு மலவாசனை சிறிதும் தாக்காது, சிவானந்தம் மேன்மேல் வளரச் செய்யும் சாதனமாதலும் உண்மையான்; அது பற்றி ஆசிரியர் விதித்துரைத்தலும் செய்தாரென்க" என்பது அவர்களது பொருளுரை.

### சமுதாயத்திற்கேற்ற சமய இயல்பு

சமயத்தினுடைய சீரிய இயல்பு சமுதாயத்தை ஒட்டியதாக இருத்தலேயாம். ஒரு குறிப்பிட்ட வழிபாட்டு முறையை எல்லோரும் பின்பற்றுவார்கள் என்பது இயலாததொன்று. அவரவர்களது மனோ நிலைக்கு ஏற்பப் பணி செய்யவும், வழிபாடாற்றவும், நல்லறம் செய்யவும் வழி துறைகள் வகுத்துக் கொடுக்கின்ற சமயமே தலையாய சமயம். என்றும் நிலைபெற்றிருக்கின்ற பேறும், அத்தகைய சமயத்திற்கே உண்டு என்றும் அறியப்படும். இங்ஙனம் சமுதாயத்திற்கே ஏற்றவாறாக, சமுதாயத்தின் சாயலாக, பழமைக்குப் பழமையாக, புதுமைக்குப் புதுமையாக விளங்குவது சைவம்.

### சால்புடைய சமயப்பணி வேண்டும்

இன்று தமிழகத்தில், கடவுட் கொள்கைக்குப் புறம்பான கருத்துக்கள் உலவுகின்றன. சமயச் சார்புடையோம் என்பவர்களிடத்திலும் உண்மைச் சமய வாழ்க்கையைக் காண்பது முயற்கொம்பாக இருக்கின்றது. இன்றைய சமயம் சடங்குச் சமயமாகக் காட்சி அளிக்கின்றதே அன்றி வாழ்க்கையில் தோய்ந்த சமயமாகக் காட்சி அளிக்கவில்லை. ஆலயங்களிலும் பிறசமய நிலையங்களிலும் சமயச் சார்புள்ள தொண்டுகள் குறைந்து லௌகிகச் சார்பு பெருகி ஆடம்பரங்களும் ஆர்ப்பாட்டங்களும் நிறைந்து வருகின்றன. ஆலயங்களும், ஏனைய சமய நிலையங்களும், செய்யவேண்டிய அளவு சமயப் பணியைச் சால்புறச் செய்யவில்லை. அவைகளின்பணி வளர வேண்டும். சமயம் சடங்களவில் நிற்கும் நிலைமாறி வாழ்க்கையில் தோய்ந்த நிலையில் காட்சி அளிக்கவேண்டும்.

---

## இந்திய யானைக்கு உழவு தொழில்

இந்திய உத்தர பிரதேசத்திலுள்ள பயிர்களை அங்குள்ள யானைகள் அழித்து வந்தன. பயிரழிக்கும் யானையைப் பயிர் ஆக்கத்துக்குப் பிரயோசனப் படுத்தத் தீர்மானித்தது அரசாங்கம். இத் தீர்மானத்தின்படி யானைகள் உழவுத்தொழில் செய்ய உபயோகப்படுத்தப் படும். இவை யந்திரக் கலப்பையில் யந்திரத்தின இடத்தை நிரப்பி யந்திரச் செலவை நீக்கும்.

ஒரு யானையின் சக்தி ஐம்பது குதிரைச் சக்திக்கு நிகராகும்.

## இலங்கைச் சர்வகலாசாலையில் வெளிமாணவர் பரீட்சைகள்

இலங்கைச் சர்வகலாசாலையில் வசிக்கும் மாணவரே இப்போ இலங்கைச் சர்வகலாசாலைப் பரீட்சைகளுக்கு அருகராகின்றனர். வெளி மாணவருக்கு அங்கு இடமில்லை. ஆனால் லண்டன் சர்வகலாசாலைப் பரீட்சைகளுக்கு இலங்கை மாணவர் அருகராகும் ஒழுங்கு பண்டுபோல இன்றும் இருக்கின்றது. லண்டன் சர்வகலாசாலையார் வறிய மாணவருக்கு வேண்டிய வசதி கொடுக்க எங்கள் சர்வகலாசாலை இவ்வாறு இடங்கொடாதிருப்பது அநீதியென அரசாங்கத்துக்குச் சில சிங்கள அறிஞர் எடுத்துக் காட்டுகின்றனர். இது எம்மவர் யாவராலும் ஊன்றிச் சிந்திக்கப்பட வேண்டியது.

## கைவேலை தையல்வேலை சித்திர உபகரணப் பொருட்காட்சி

இக்காலக் கல்வித்திட்டத்திற்கேற்ப பல துறைகளிலும் முன்னேறும் பாடசாலைகளுக்கு ஏனைய பாடசாலைகளுக்கு அளிக்கப்படும் வசதிக்கட்டணம் சகாயப்பணம் சம்பளம் ஆதியன அளிக்கப்படாதிருப்பது சரியல்லவென அளவெட்டி சதானந்த வித்தியாசாலைத் தலைமையாசிரியர் திரு. அ. பொன்னுத்துரை அவர்கள் ஷை காட்சித் திறப்புவிழாவின்போது கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது இப்பாடசாலை சங்கீதம், கைவேலை, சமயம், விளையாட்டு ஆதிய துறைகளிலும் முன்னேறிப் பரிசில்களும் பெற்று வருகின்றது. இவ்விதம் அரசாங்கத்தார் கவனியாதிருப்பது பாடசாலையின் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டையாய் இருப்பதுடன் அரசாங்கத்தாரின் தற்போதய கல்வித் திட்டமும் நிறைவேறமாட்டாது.

காட்சி வடமாகாண வித்தியாதிகாரி திரு. K. கிருஷ்ணபிள்ளை அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அவர் கூறியதாவது "சில பாடசாலைகள் சில துறைகளில் மாத்திரம் முன்னேறிவர இப்பாடசாலை எல்லாத் துறைகளிலும் முன்னேறுவதைக் கண்டு சந்தோஷப் படுகின்றேன். இவ்வித பாடசாலைகளை நாம் பெரிதும் வரவேற்கின்றோம் காட்சிப்பொருள்களில் சில மிக வியக்கத்தக்கவைகளாக இருக்கின்றன. இவ்விதம் பாடசாலையின் வளர்ச்சிக்கு ஒத்துழைக்கும் தலைமையாசிரியரையும் உதவியாசிரியர்களையும் மாணவர்களையும் யான் பெரிதும் பாராட்டுகிறேன்.

காட்சியில் திறமை காட்டியோரைத் தேர்ந்தெடுப்பதற்கு மத்தியஸ்தர்களாக திரு. S. R. கனகசபை, S. தணியாசலம், ஸ்ரீமதி. G. A. துரைசிங்கம் ஆதியோர் கடமையாற்றினர். திறமை காட்டியோர்க்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. இறுதியில் தலைமையாசிரியர் அவர்களால் நன்றியுரை கூறப்பட்டது.

## நுளம்புக் கடியால் மரணம்

சான்பிரான்சிஸ்கோவிலே ஒருவகைப் பயங்கரமான நுளம்பு வசிக்கின்றது. இந்த நுளம்புக் கடியால் ஒரு வாரகாலத்தில் கலிபோனியா நகரில் நித்திரை செய்யும்பொழுது படுக்கையிலேயே பன்னிருவர் இறந்தனர். முழு நாட்டிலும் 315 பேர் இறந்தனர். அரசாங்கம் வேண்டிய பாதுகாப்புச்செய்கின்றது.

## 71 நாள் உண்ணாவிரதம்

ரியூனிஷிய வாசியாகிய ரூய்கான் என்பவர் 70 நாள் 16 மணி 6 நிமிடம் உண்ணாவிரதமிருந்தாரென்றும் பாகீர் பேர்மா என்னும் இந்தியர் 71 நாள் உண்ணாவிரதமிருந்தாரென்றும் அறிய வருகின்றது. இது உலகில் அதி நீண்டகால உபவாசமாகும்.

ஸ்டாலினுக்குப்பின் மலென்கொவ் என்பவர் ருஷிய தலைவராகக்கூடுமென அறிய வருகின்றது.

---

## திருஞான சம்பந்தர் திருமுறை

முதலாம்பக்கத் தொடர்ச்சி

யைப் பலவிதமாகப் பிரித்து அவைகளுக்கு எடுத்துக் காட்டுக் கூறுபவர் 'சம்பந்தனது தமிழ்" என்று காட்டுவார் என்றால் இந்தத் திருமுறைகளின் சிறப்பை என்னென்பது.

### தமிழ்ப்பற்று

சம்பந்தர் தன்னைக் குறிக்கும் இடந்தோறும் "தமிழ் விரகன்", "தமிழ்ஞான சம்பந்தன்" "தமிழ்நாடுடைஞானசம்பந்தன்" என்பன போன்ற அடைமொழிகளைக் கூறுவதினாலும "மந்திபோல் திரிந்தாரியத்தோடு செந்தமிழ்ப் பயன் அறிகிலா அந்தகர்" என்பன போன்ற சொற்றொடர்களால தமிழ் அறியாதவர்களை இழித்துக் கூறுவதாலும தமிழ்ப் பற்று மிக்குடையவர் எனபது போதரும்.

### வாழ்க்கை இன்பம்

"கனைகொள் இருமல் சூலை நோய் கம்பதாளி குன்மம்" முதலிய செடிகொள நோய் கொண்ட யாக்கை உயிரொடு வாழுங்காலத்து ஓரோவழிய அனுபவிக்கும் இன்பத்தைப் பாம்பின் வாயில் அகப்பட்ட சிறுவண்டு தேனைச் சுவைத்து இன்புறலை ஒக்கும் என்னும் கருத்துப்பட "செடி கொள நோய் யாக்கையைம் பாம்பின வாய்ச் சிறுபறவை கடிகொள் பூந் தேன் சுவைத்தின்புறலா என்று கருதினாயே" என அருளுகின்றனர்.

### தற்குறிப்பேற்றம்:

சுவாமிகள் தேவாரங்களில் தற்குறிப்பேற்ற அணிஅமைந்திருக்கும் மாட்சியும் பாராட்டற்குரியதாகும், "புலனைந்தும் பொறி கலங்கி நெறி மயங்கி அறிவழிந்திட்டு ஐம்மேலுந்தி அலமந்தபோதாக அஞ்சேல்" என்று அருள்புரிவான் அமர்ந்துள்ள ஐயாறு சொல்கின்றார் சம்பந்தர். ஆலயத்தின உட்பிராகாரத்தில் அணிகள ஒளிவிட்டு வீச வலமாக நடமாடுகின்றார்கள மகளிர். முரசினை முழங்குகின்றார்கள் முழவர்கள். மாமேறி மேலநோக்குகின்றன மந்திகள். மின்னொளி வீச இடியோசை மிளிர, மழை என்று அஞ்சி மாமேறி மந்திகள் வானத்தை நோக்குகின்றனஎன்னும் கருத்தமைய; "வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென்றஞ்சிச் சிலமந்தி அலமந்து மாமேறி முகில்பார்க்கும் திருவையாறே" எனப் பாடுகின்றார்.

சம்பந்தர் ஒருவமயம் செல்கின்றார் திருவீழிமிழலை. காண்கின்றார் உயர்ந்து தோன்றும் கோபுரத்தை. அதன் மேல் ஒரு மூங்கில் கம்பம். அதில் ஒரு துகிற்கொடி அசைகின்றது விண்ணோக்கி. கண்டதும் இசையோடு பண் எழுகின்றது. "தானுவாய் நின்றபரத்துவனை உத்தமனை இறைஞ்சீர் என்று வேணுவார் கொடி விண்ணோர் தமைவிளிப்பபோலோங்கும் மிழலையாமே" இன்னும் இதுபோல் உள்ள தேவாரங்கள் படித்து இன்புறற்குரியன.

### இறைவன் தன்மை:

உயிர்கள் எண்பத்துநான்கு நூறாயிரம் பேதங்களையுடையன. அவைகள் அனைத்தையும படைத்து எல்லாவற்றினும் உயிராக இரண்டறக் கலந்து நிற்பவன் இறைவன் என்னும் சாத்திரக் கருத்தை "உரைசேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனிபேதம் நிறை சேரப் படைத்து அவற்றின் உயிர்க்குயிராய் நின்றான கோயில்" என்ற பகுதியால் அறிவுறுத்துகின்றார். இறைவன் அயனாகிப் படைத்தும், மாலாகிக் காத்தும், ருத்திரனாகி அழித்தும் ஆகிய மூன்று வடிவங்களைக் கொண்டு முதலொருவனே செய்கின்றான் என்ற கருத்தை, "கானமாறாய பெருமானுகிக் காலமாய குணங்களமூன்றாய்ப் பேணுமூன்றுருவாகிப் பேருலகம் படைத்தளிக்கும் பெமமான் கோயில" என்ற பாடலால் விளக்குகின்றார்.

தான் ஒரு கருப்பையில் இல்லாதவனாக இருந்து எல்லா உயிர்கட்கும கருவாக இருப்பான; உருவம் இன்றி எல்லா உயிர்கட்கும உருவம் கொடுப்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

திறமான
தேக்க மரங்கள்
பல தினிசுகளிலும்

திறமான
ஸ்ரீமார்க் ஓடுகள்
$13\frac{3}{4}$, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

Std. 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் மன்றம்

# வீடும் நாடும் அன்னையரிடத்தில்

### சேவை செய்யும் முறை

தாய்மார்கள் இவ்விதம் சேவைக்குத் தயாரானதும தங்கள் வேலைக்கென ஒரு வட்டாரத்தை செரிவு செய்துகொள்ள வேண்டும். அப்பகுதியில் உள்ள குறைபாடுகளைப் புள்ளி விபரங்களோடு அறிந்துகொண்டு வேலையைத் தொடங்க வேண்டும். சிலவேலைகளில் தனித்தும், சிலவேலைகளில் கூட்டமாயும் பொறுப்பேற்கவேண்டிவரும். குறித்த வீடுகளுக்குச்சென்று அங்குள்ள சுகாதாரக் குறைவுகளைச்கவனித்து உதவி செய்யலாம். கர்ப்பிணிகளையும், தாய்மார்களையும் சந்தித்துப் புத்திமதி கூறலாம். இயற்கையாகக் கிடைக்கக்கூடிய உணவுகளை உபயோகிக்கச் செய்யலாம். விலைகூடிய கோவாவுக்குப் பதில் மலிந்த சத்துள்ள பொன்னாங்காணி, வல்லாரை போன்றவற்றைப் பழக்கலாம், வீட்டுத் தோட்டங்களை உண்டாக்க உதவலாம். பாலுணவுக்குப் பசுவளர்ப்பைத் தூண்டலாம். தவிட்டரிசியின் மேன்மையைக் கூறி உரல் உலக்கையை உபயோகத்துக்குக் கொண்டுவரலாம் பலதாய்மார்களை ஒன்று சேர்த்து சுகாதாரம், உணவு, சனமயல் விஷயங்களைப் போதிப்பதோடு செய்துமகாட்டலாம். எப்படியும் நல்ல சுகபெலமுள்ள சந்ததிகளை நாட்டில் விருத்தி செய்வதில் தாய்மார்களே முழுக் கவனமும் செலுத்த வேண்டும். 'தாயைப் போலத் தானே பிள்ளை''.

### உடை நடை

உடை முக்கியமான ஒரு தேவையாயிருந்தும் அவ்விஷயத்தில் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்பதில் பல தாய்மார்கள் கவலைகொள்வதில்லை. ஏன் உடுப்பது என்பதைக்கூட மறந்து போகுமளவுக்கும் உடைக் கொள்கை மாறதலடைந்து வருகிறது. பண்பாடுகள் கலாச்சாரங்கள்கூட அவமதிக்கப்படுகின்றன. அரை உடை, கால் உடை என்றெல்லாம் ஆபாசமாக உடுத்துகிறார்கள். உடுப்பு அளவிற் குறைவாயினும் செலவு மிகக் கூடவாகிறது. செலவு அளவுக்கு மிஞ்சும்போது அது ஆபாச உடுப்பாகிறது. இந்தப் பரிதாபகரமான நிலையிலிருந்து தாய்மார்கள் விடுபடவேண்டும். பழைய தாய்மார்கள்கூடத்தமது அருமையான குழந்தைகளை நாகரிகத்தின் பெயரால் இப்படிக் கெடுத்து வடிவு பார்க்கிறார்கள்! இப்படி ஒரே நேரத்தில் பண்பாடும் பணமும் கொலையுண்ணும் இரட்டைக் கொலைகளை உடனே ஒழிக்கவேண்டும். மானத்துக்கு உடுப்பது, மலிவாய் உடுப்பது, சுத்தமாய் உடுப்பது, அழகாய் உடுப்பது, அளவுக்கு உடுப்பது என்ற கருத்துக்களைத் தாய்மார்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். எத்தனையோ ஏழைகள் உடுத்தத் துணிக்கு அடுத்த துணியில்லாது, குளித்துவிட்டு மாற்றிக் கட்ட மறுதுணியில்லாது தவிக்கையில் சில நாகரீகமணிகள் நாலு பத்து அலுமாரிகளில் புடவைக் கடையெவ்வொன்று வீட்டுக்கு வீடு வைத்து மணிக்கு மணி மாறிக் கட்டுகிறார்கள். ஒரு ஊருக்குப் போதுமான துணியை ஒரு வீட்டில் வைத்திருப்பது சுயநலத்தடிப்பு மாத்திரமல்ல பாவமுமாகும். தகுதியுள்ள தாய்மார்கள் இவற்றைக் கவனிப்பதோடு ஏழைகளுக்குத் துணிகள் கொடுத்தும் தைத்துக் கொடுத்தும், தையல் பழக்கியும் உதவலாம்.

### கல்வி பயிற்றல்

எல்லாச் சீர் திருத்தத்துக்கும் கல்வியறிவு முக்கியம். குறித்த வட்டாரத்தில் ஒவ்வொரு பெண் பிள்ளையும் படிக்கச் செய்யவேண்டும். படிக்காத பிள்ளைகளைப் பெற்றோரிடமிருந்து விடுவித்துப் பள்ளிக்கனுப்ப வேண்டும். பதினான்கு வயதுவரை கட்டாயக் கல்வி என்ற கொள்கையாவது கைக்கொள்ளவேண்டாமா? அனைத்தைப் பிள்ளைகளுக்குரிய உணவு உடை புத்தகச் செலவுக்கு வழி தேடவேண்டும் வயது குறைந்த பிள்ளைகளை எந்தக் காரணத்தைக் கொண்டும் வீட்டு வேலைக்கமர்த்தும் வழக்கத்தைத் தாய்மார்கள் கண்டிப்பாக கிறுத்த வேண்டும். வளர்ந்தவர்களும் கேள்வியறிவு மூலம் கல்வி கற்க உதவ வேண்டும். விசேட கலைகளையும் வளர்க்கவேண்டும். நிலையான வாசிக சாலைகளையும், சுற்றும் வாசிகசாலைகளையும் ஏற்படுத்தி நல்ல நூல்களை வாசிக்கவும் செய்யலாம். வீட்டுஆட்சியும் நாட்டுஆட்சியும் தாய்மார்களிடம் தங்கியிருக்கிறதென்பதை எடுத்துக் காட்ட வேண்டும், பாராளுமன்றமே தாய்மார்களின் எண்ணத்துக்கு நடக்க வேண்டும். தாய்மார்களை நிர்மூலமாக்கும் மதுவைப் பெருக்குகின்ற இன்றைய அரசாங்கம் ஒருபோதும் தாய்மார்களால் ஆக்கப்பட்டிருக்க முடியாது. மதுவிலக்குக் கொள்கையை அடிப்படையாக வைத்துத் தமது வாக்குரிமைகளை உபயோகிக்கத் தாய்மார்கள் கற்றுக்கொள்ள வேண்டும். தாய்மார்கள் அறிவற்ற குருட்டுப் பிராணிகளாய் இருக்கும்வரையும் தவறானவழிக்கு அழைத்துச் செல்லப்பட வேண்டியவர்களேயாவர்.

**திரு. பொ. கந்தையா**

— தமிழ் மகள் —

### சிக்கன வாழ்வு

சிக்கன வாழ்வே சிறந்த வாழ்வு. அதிகம செலவு செய்வதை ஒரு நாகரீகமாகக் கருதும் இக்காலத்தில் உழைப்புக் குறைகிறதென்பதும், கடன் கூடுகிறதென்பதும் ஒவ்வொரு வீட்டிலும் கேட்கும் இரு சத்தங்களாகும். உழைப்பை நேர்மையான வழியில் கூட்டுவதற்கு எல்லாருக்கும் சாத்தியப்படாது. ஆனல் செலவைக் குறைப்பதற்கு எல்லாருக்கும் முடியும். குடிசைக் கைத்தொழில்கள் மூலமும் கொஞ்சம வருவாயை உண்டுபண்ண வேண்டும். குறைத்துச் செலவு செய்வதே நாகரீகம் என்று தாய்மார்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். முக்கியமாகக் கடன்படாமல சீவிக்கப் பழகவேண்டும். சிறு சிறு சேமிப்பு இயக்கங்களும் வேண்டும். வட்டிக் கடைகளை வாழ்க்கைக்குதவி என்று வாழ்த்தாது, அவை மனிதரை ஓட்டாண்டிகளாக்கும் ஒருவகைப் பொறிகள் என்று கொள்ள வேண்டும். உள்ளவர் இல்லாதவருக்கு உபகாரமாகவோ கைமாறாகவோ கொடுத்துதவுவது நல்ல விஷயமாகும். ஒவ்வொரு குடும்பமும் மாதாந்த வரவு செலவுகளை எழுதிவைக்கப் பழகவேண்டும். அப்போதுதான் திருத்தங்களைக் காணமுடியும். சேவை செய்யும் தகுதியுள்ள தாய்மார்கள் தங்கள் சிக்கனமான வரவு செலவுக் கணக்குகளை மற்றைய தாய்மார்களுக்கு முன்மாதிரியாகக் காட்டலாம்.

உலகத்திலுள்ள செல்வங்களெல்லாம் ஆண்டவனுடையவை, அவற்றில் நமது உடமையை உழைப்பாகவும், நமது தேவையை ஊதியமாகவும் கொள்ள வேண்டும். நமது தேவைகளுக்கு மேலாக எதையும் அனுபவிக்க முயல்வது ஆண்டவனிடம் திருட்டுத்தனஞ் செய்வதேயாகும். ஆதலால் அளவுக்கதிகமான சொத்துக்களை நமது ஏழைகளுக்குக் கொடுப்பதன்மூலம் ஆண்டவனிடம் திருப்பிக்கொடுத்துவிட வேண்டும். ஆண்டவனுடைய சொத்துக்களையும், அவனளித்த வசதிகளையும அவனுடைய பிள்ளைகளாகிய நாம் எமக்குள்ளே பகிர்ந்து கொண்டால் அதுவே காந்தியடிகளும் அன்னை கஸ்தூரிபாயும் விரும்பிய உண்மை வாழ்வாகும். தன பலம் [illegible] தாய்மார்களின் உண்மையான சேவையே வீட்டிலும் நாட்டிலும் சமாதானத்தைப் பிறப்பிக்கும்.

## திருஞானசம்பந்தர் திருமுறை

( 3-ம் பக்கத் தொடர்ச்சி )

பசன் என்பதும் சாத்திரக் கொள்கை. இதனைக் ''கருவினு லன்றியே கருவெலாமாவன உருவினுலன்றியே உருவுசெய்தானிடம்'' என்னும் தேவாரத்தில் அறிவுறுத்துகிறார். எல்லா உயிரினும் இறைவன் கலந்து நிற்பினும் மெய்ஞ் ஞானமுடையஞானியர்க்கன்றி ஏனையோர்க்குச் சேயோன் என்பதை, ''அகனமர்ந்த அன்பினராய் அறுபகைசெற்றைம் புலனும் அடக்கி ஞானப் புலனுடையோர்தம் முள்ளப் புண்டரிகத் துள்ளிருக்கும் புராணன்'' என்னும தேவாரத்தில் அமைத்துள்ளார். இன்னும இறைவன தன்மையைக்கூறப் புகின் விரிக்கிற் பெருகும்.

### அகப்பொருட்சுவை :

தலைவி தலைவனின் பெரும் புகழ் கேட்டலில் பெரிதும் விருப்புடையவள். அதனுல் தலைவன் புகழைச்செல்லும்படி கிள்ளை முதலிய அஃறிணைப் பொருளைகளை விரும்பி அழைத்து பெயர் சொல்லும்படி தலைவி கேட்டல் மரபு. இதனை உறுபெயர் கேட்டல் எனும் மெய்ப்பாடென்பர் ஆசிரியர் தொல்காப்பியர். இவ்விலக்கணத்திற்கு இலக்கியமாக இருக்கிறது சம்பந்தர் தேவாரம்பல. அவற்றுள் ஒன்று,

''சிறையாரும் மடக்கிளியே!
இங்கேவா தேனெடுபால்
முறையாலே உணத்தருவன்
மெய்பவளத்தொடு தாளம்
துறையாருங் கடல்தோணி
புரத்தீசன் துளங்கும் இளம்
பிறையாளன் திருநாமம
எனக்கொருகாற் பேசாயே''

### பயன் :

''ஞானசம்பந்தன் பண்ணிய
செந்தமிழ் பத்தும் வல்லார்
புண்ணியர் சிவகதி
அடைதல் திண்ணமே''

ஞானசம்பந்தன் சொல், ''சிந்தைசெய்து பாடவல்லார் சிவகதி சேர்வரே'' எனவும், கவுணியன் சொல், 'மடியாது சொல்லவல்லார்க்கு இல்லையாம மறுபிறப்பே'' எனவும், சம்பந்தன் தமிழ், ''பண்கொளப் பாடவல்லார்க்கு இல்லை பாவமே'' எனவும், ''தமிழ் விரகனுரை ஒருபதும் மனமகிழ்வொடு பயில்வர் எழில மலாமகள் கலைமகள் சயமகள் இனமலி புகழ்மகள் இசைதரு யிருநிலனிடை யினிதமர்வரே'' எனவும் பாடிய திருக்கடைக்காப்புத் தேவாரங்களை நோக்குங்கால் இவர் தேவாரங்களை 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி'' ஓதுவார்க்கு இம்மை இன்பத்தோடன்றி எக்நெறியினும் மேல்நெறியாம செய்நெறியினை அடைவித்து, பேரவியற்கைப் பெருமபேரருளினை எய்துவிக்கும் என்பதும் ஒருதலை. —ஞானசம்பந்தம்.


L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=0=

தந்தி: ''JEWELLERS''
போன்: 161.

கிளைத்தானம்:
63, கன்னுதிட்டி
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி
1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசம் தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பஙகுகள் எந்த நேரமும் வாஙகலாம்.

தினசரிப்பற்றுவரவு.
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏறபடும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள ''நாஷனல்'' வங்கியிலும் ''இம்பீரியல்'' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாஙகவுமான விசேஷ ஒழுஙகுகள செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிரூப்பர்.
Std. 14 20-11-46—20-11-49.

நீங்கள் இளமைப் பருவத்தையடைய
சி. எம். சாமி
தங்க பஸ்பம்
உபயோகியுங்கள்

தாதுபுஷ்டியைத் தருவதில் சிறந்தது.
இதற்கு நிகரானமருந்து வேறு ஒன்றுமில்லை.

அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், இரதத விருத்தியும் உண்டாக்கும். இல்வாழ்க்கையில் அதியற்புதசுகந்தரும.
நீரழிவு பவுத்திரம், மூலம், குன்மம, இடுப்புவலி, வாய்வு, வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்கும,
24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ.25—0—0

குரு பஸ்பம் (தொய்வுக்கு)
தொய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு தொண்டைவலி, க்ஷயம் முதலிய சகல வியாதிகளையும நீக்கும்.
அருமையானது.
24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20

மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S I
(கியாட்லாக் இனும்)

M. 16. 25-4-52—25-10-52.


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Tuesday, August 26. 1952,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org